# Kanchipuram Dt

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி வணிகவியல் மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:-

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 10×1=10

1) சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு ______

அ) 2004 ஆ) 2007 இ) 2006 ஈ) 2008

2) சுயஉதவிக்குழுக்கள் தங்கள் சேமிப்புத் தொகையை வசூலித்து ______ ஏற்படுத்த வேண்டும்

அ) பொதுநிதி ஆ) குழு தொகுப்பு நிதி

இ) குழு நிதி ஈ) எதுவும் இல்லை

3) உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது

அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்

4) உள்நாட்டு வியாபாரத்தை ______ வகைகளாகப் பிரிக்கலாம்

அ) மூன்று ஆ) நான்கு இ) இரண்டு ஈ) ஐந்து

5) வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?

அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர்

இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்

6) சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனால் ______ அடங்குவர்.

அ) இடம் பெயர் வியாபாரிகள் ஆ) சுமைதூக்கும் வியாபாரிகள்

இ) பொதுப்பண்டக சாலைகள் ஈ) வாகனத்தில் விற்போர்

7) நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்குச் சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ______ என்பவர்.

அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்

இ) தெருக்கடை வியாபாரிகள் ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

8) நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில்நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம் பெயருவது

அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்

இ) மறுஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

9) EPC யின் விரிவாக்கம்

அ) ஏற்றுமதி செயல்முறை குழு ஆ) ஏற்றுமதி வளர்ச்சிக்குழு

இ) ஏற்றுமதி சரக்கேற்றி குழு ஈ) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்

10) கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது

அ) அனுப்புகை இரசீது ஆ) கப்பல் இரசீது

இ) கப்பல் துணைத்தலைவர் இரசீது ஈ) வாணிகத்தூதுவர் இடாப்பு

## பகுதி - ஆ

**II.** எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.

வினா எண். 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:- 5×2=10

11) குறு நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக?

12) சுயஉதவிக்குழு என்றால் என்ன?

13) இறக்குமதி என்றால் என்ன?

14) சில்லறை வியாபாரி வரைவிலக்கணம் தருக.

15) சிறப்பு பண்டகசாலைகள் என்றால் என்ன?

16) மறுஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?

17) நாணய உறுதிக்கடிதம் என்றால் என்ன?

## பகுதி - இ

**III.** எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.

வினா எண். 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:- 5×3=15

18) இந்தியப் பொருளாதாரத்தில் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக. (ஏதேனும் 3)

19) இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி மூன்றினை குறிப்பிடுக.

20) மொத்த வியாபாரிகளின் பண்புநலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

21) மடங்கு கடைகளின் குறைபாடுகள் யாவை? விளக்குக. (ஏதேனும் 3)

22) பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக்கூறுகள் ஏதேனும் மூன்றை விளக்குக.

23) இறக்குமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் யாவை?

24) சரக்காணையின் வகைகள் யாவை? விளக்குக?

## பகுதி - ஈ

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 3×5=15

25) முத்ரா வங்கி விளக்குக. (அல்லது)

உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

26) மொத்த வியாபாரிக்கும், சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

(அல்லது)

துறைவாரி பண்டகச் சாலையின் சிறப்பியல்புகளை விவரி?

27) உள்நாட்டு வணிகத்திற்கும், பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)

இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள் யாவை?

********